கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2009/2010 (மார்ச் 2012)

**TLS 3203** தெரிவு செய்யப்பட்ட நூல்கள்

LIBRARY
03 JUN 2012
Eastern University, Sri Lanka.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

முதலாம் வினாவுக்கும் ஏனையவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

01. பின்வரும் செய்யுள்களின் (i) பொருளைத் தெளிவுறத் தருக. (ii) கீழ்க்கோடிட்ட பகுதிகளின் நயங்காண்க.

(அ) வழிபடுவோரை வல் அறிதீயே
பிறர்பழி கூறுவோர் மொழி தேறலையோ
நீ மெய் கண்ட தீமை காணின்
ஒப்ப நாடி, அத்தக ஒறுத்தி;
வந்து அடி பொருந்தி முந்தை நிற்பின்
தண்டமும் தணிதி, நீ பண்டையின் பெரிதே
அமிழ்து அட்டு ஆனாக் கமழ் குய் அடிசில்
வருநர்க்கு வரையா வசை இல் வாழ்க்கை
மகளிர் மலைத்தல் அல்லது, மள்ளர்
மலைத்தல் போகிய, சிலைத்தார் மார்ப!
செய்து இரங்கா வினை, சேண் விளங்கும் புகழ்
நெய்தலங்கானல் நெடியோய்
எய்த வந்தனம் யாம்; ஏத்துகம் பலவே

(ஆ) யாய் ஆகியளே மாஅயோளே
மடைமாண் செப்பில் தமிய வைகிய
பெய்யாப் பூவின் மெய் சாயினளே
பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்
இனமீன் இருங்கழி ஓதம் மல்கு தொறும்
கயம் மூழ்கு மகளிர் கண்ணின் மானும்
தண்ணம் துறைவன் கொடுமை
நம்முன் நாணிக் கரப்பாடும்மே

(இ) தம்முடைய தண்ணளியும் தாமும் தம்மான் நேரும்
எம்மை நினையாது விட்டாரோ விட்டகல்க
அம்மென் இணர அரும்புகாள் அன்னங்காள்
நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால்
புன்கண் கவர் மாலைப் புலம்பு எண் கண்ணேபோல்
துன்பம் வடிவாய் துயிலைப் பெறுதியால்
இன்கள்வாய் நெய்தல் நீ எய்தும் கனவினுள்
வன்கனார் கானல் வரக் கண்டறிதியோ

(ஈ) பின்வரும் குறட் பாக்களுக்கு பொருள் கூறுக.
கீழ்க்கோடிட்ட பகுதிக்கு விளக்கம் தருக

அருவினை யென்ப வுளவோ
கருவியாற் காலமறிந்து செயின்

வினை வலியுந் தன்வலியு மாற்றான் வலியுந்
துணை வலியுந் தூக்கிச் செயல்

02. அகத்திணைக் கருப் பொருட்கள் குறுந்தொகைப் பாடல்களின் அழகியலிற் செல்வாக்குச் செலுத்துமாற்றை உமக்குத் தரப்பட்ட பாடற் பகுதியை வைத்து ஆராய்க.

(25 புள்ளிகள்)

03. “மன்னர் அல்லது வீரரைப் புகழ்தல் என்பதே பெரும்பாலான புறநானூற்றுப் பாடல்களின் நோக்கமாகும்.” இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

(25 புள்ளிகள்)

04. அரசாள்வோர்க்கு உறுதுணையாய் அமையும் அமைச்சனின் இயல்புகள் குறித்து வள்ளுவர் கூறுவனவற்றைத் திருக்குறள் பொருட்பாலைத் துணைக்கொண்டு விளக்குக.

(25 புள்ளிகள்)

05. கானல்வரிப் பாடல்களில் நெய்தல் நில வருணனை வெளிப்படுத்தப்படுமாற்றை விளக்கி அவ்வருணனை மாதவியின் மனநிலையை வெளிப்படுத்தப் பயன்படுமாற்றைத் தெளிவுபடுத்துக.

(25 புள்ளிகள்)

06. நந்திக் கலம்பகம் அக, புற மரபுகளுடாக நந்திவர்மனின் புகழை வெளிப்படுத்துமாற்றை மதிப்பிடுக.

அல்லது

பெரியாழ்வாரது பாடல்களில் பக்தி உணர்ச்சியோடு தாய்மை உணர்ச்சியும் சங்கமித்துள்ளது என்று கூறலாமா? ஆராய்க.

******



14